# "கல்முனை முஸ்லிம்களது திருமண நாள் வைபவம்: ஒரு இஸ்லாமிய கண்ணோட்டம்"

**Supervisor**
*Dr.M.I.M.Jazeel*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Ms. M.I. Rinosa*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

"கல்முனை முஸ்லிம்களது திருமண நாள் வைபவம்: ஒரு இஸ்லாமிய கண்ணோட்டம்" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வாய்வினது நோக்கம் கல்முனை முஸ்லிம்களது திருமண நாள் வைபவ நிகழ்வுகளை விபரித்து, அவை முழுவதும் இஸ்லாமிய விதிகளுக்கமைவாக இடம் பெறுகிறதா? என்பதை ஆய்வு செய்வதாகும். நோக்கங்களை அடையும் வகையில் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டதோடு அளவுசார், பண்புசார் ஆய்வு முறையினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்குத் தேவையான முதலாம் நிலைத்தரவுகளானது நேர்காணல், கலந்துரையாடல், அவதானம் ஆகிய வழிகளில் பெறப்பட்டு கணனி மென்பொருளான SPSS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகளானது நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தள ஆக்கங்கள், பிரதேச சபை அறிக்கை எனபவற்றின் மூலம் திரட்டப்பட்டன. இவ்வாய்வின் மூலமாக கல்முனை முஸ்லிம்களது திருமண நாள் நிகழ்வுகளை இனம் கண்டு அவை பற்றி அறிய முடிந்தது. முஸ்லிம்களிடையே பின் பற்றப்படும் இத்திருமண நாள் வைபவ நடைமுறைகள் மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை அறிய முடிகிறது. மேலும் இங்கு பின்பற்றப்படும் சில பாரம்பரிய வழக்குகள் அருகி வருவதையும், கால மாற்றத்தால் நவீன விடயங்கள் சில உட்புகுந்துள்ளமையையும், அந்நிய கலாசார தாக்கம் இடம்பெற்றுள்ளமையையும் இவை எவ்வளவு தூரம் இஸ்லாமிய நெறிகளுடன் இணைந்து செல்கிறது என்பதையும் அறிய முடிகிறது.
எனவே கல்முனை முஸ்லிம்களுடைய திருமண நாள் வைபவத்தை விபரித்து அதில் இடம்பெறும் இஸ்லாத்துக்கு முரணான செயற்பாடுகளை சுட்டிக்காட்டி, கல்முனை முஸ்லிம்கள் மட்டுமன்றி ஏனைய முஸ்லிம்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், எதிர்காலத்தில் இது தொடர்பான ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

***Key Words:*** முஸ்லிம், திருமண நாள் வைபவம், இஸ்லாம்